


# SRCAS PULSE

An IQAC Initiative

3rd August, 2022




SRCASofficial

www.srcas.ac.in

# நம் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா




நம் கல்லூரியில் 2022-2023-ம் கல்வியாண்டில் சேர்ந்துள்ள முதலாமாண்டு இளநிலை அறிவியல் பாடப்பிரிவு மாணவர்களுக்கான வரவேற்பு விழா, கல்லூரி கலையரங்கில் இன்று (03.08.2022) நடைபெற்றது.

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் திரு. ஆர். சுந்தர் தலைமை வகித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் வரவேற்றார்.

கோவை மாநகர காவல் தெற்கு கோட்ட துணை ஆணையர் திரு. என். சிலம்பரசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியதாவது: மாணவர்களுக்கு பல்வேறு கனவுகள் இருக்கலாம். விரும்பிய படிப்பில் இடம் கிடைக்காமல் போனால் கிடைத்த படிப்பை மனதாரப் படிக்க வேண்டும். விரக்தி அடையக்கூடாது. மாணவர்களுக்கு கல்லூரி பருவம்

# Events @ SRCAS















# Events @ SRCAS

























மிகவும் முக்கியமானது. கல்லூரியில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக நூலகங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சாதனையாளர்களைப் பட்டியலிட்டால் அவர்கள் வாசிப்பில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பார்கள். புத்தகங்கள் வாசிப்பதால் நிறைய கற்றுக் கொள்ள முடியும். அறிவு பரவலாகும். வெற்றி நமதாகும். இவ்வாறு அவர் கூறினார்.

டாட்டா கன்சல்டன்ஸி டி.சி.எஸ். அயான் நிறுவன கல்வி ஆலோசகர் டாக்டர் ஷிபானி மஹாபத்ரா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசும்போது, “எந்த படிப்பை படித்தாலும், வாய்ப்புகள் மிகவும் அதிகம். வங்கி, நிதி, சில்லறை வணிகம் என பல்வேறு தொழில்துறைகளில் வாய்ப்புகள் உள்ளன. சுய தொழில் தொடங்கிக் கூட முன்னேறலாம். நவீன தொழில்நுட்பங்களும் கைக்கொடுக்கும்.

உதாரணமாக பெருந்தொற்று காலங்களில் நாமெல்லாம் டிஜிட்டல் பண பரிவர்த்தனை பயன்பாடு அதிகரித்தது. நாமெல்லாம் இணைய உலகத்திற்குள் வாழத் தொடங்கினோம். எனவே மாணவர்கள் படிக்கும் படிப்பை ஒரு பிடிப்புடன் படிக்க வேண்டும். மாத்தி யோசிக்க வேண்டும். அதற்கேற்ப தங்களுடைய பயிற்சியையும் மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து முதலாமாண்டு மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. பின்னர் துறைத்தலைவர்களை மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். முடிவில் துணை முதல்வர் முனைவர் எஸ்.தீனா நன்றி கூறினார்.

# கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா





பல வருடங்களாக சதுரங்க விளையாட்டில் ஆதிக்கம் செலுத்தி நம் இந்தியாவை GRAND MASTER 2013 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் தமிழகத்தை சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்தை தோற்கடித்து நம் இந்தியாவின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்தார் நார்வே நாட்டைச் சேர்ந்த "மேக்னஸ் கார்ல்சன்". பன்னாட்டு சதுரங்க கூட்டமைப்பின் உலகத் தரவரிசையில் முதலிடம் பிடித்த இவர் நிகழ்த்திய சாதனைகள் ஏராளம். உலக சதுரங்க மாஸ்டர்களில் மிகப்பிரபலமான இவர் ஐந்து முறை உலகச் சதுரங்க வீரர் என்ற பட்டத்தையும், மூன்றுமுறை அதிவேக சதுரங்க வீரர் என்ற பட்டத்தையும் ஐந்துமுறை உலக பிளிட் சதுரங்க வீரராகவும் வலம் வந்தவர்.!

இவ்வளவு பெரிய GRAND MASTER, மறுபடியும் பதினொன்றாம் வகுப்பு படிக்கும் நம் தமிழக மாணவனால் தோற்கடிக்கப்படுவார் என்று யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டோம். அவ்வளவு ஏன் "மேக்னஸ் கார்ல்சன்" கூட அந்த போட்டிக்கு முன்புவரை நினைத்திருக்கமாட்டார். அதுவும் 2022 பிப்ரவரி 22, 2022 மே 20 ஆகிய இரு தினங்களில் நடைபெற்ற போட்டியில் இரண்டுமுறை மேக்னஸ்

கார்ல்சனை வென்ற முதல் இளம் வயதுகொண்ட வீரன் என்ற பெருமையைப் பெற்றான் தமிழகத்தைச் சேர்ந்த பிரக்யானந்தா. இவனது இந்த வெற்றி உலக நாடுகளிடம் இந்தியாவின் ஆதிக்க கொடி மறுபடியும் பறக்க காரணமாகிறது.

சதுரங்கத்தை உலகிற்கே கற்றுத்தந்தவர்கள் நாங்கள்தான் என்று கர்வத்தோடு மார்தட்டிச் சொல்வதற்குக் காரணமாகியுள்ளான் பிரக்யானந்தா. இது ஒன்றும் அவ்வளவு எளிதாகக் கடந்து செல்லும் அளவுக்கு அவ்வளவு எளிதான காரியமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்." ஏனெனில் அத்தகு மகத்தான சாதனைக்குச் சொந்தக்காரன் பிரக்யானந்தா. இவனை நமது மத்திய, மாநில அரசுகள் எப்படி கையாள்கின்றன, எந்த அளவுக்கு நிதி உதவிகள், பாராட்டுகள் செய்துள்ளன என்பதை நான் அறியேன். எனினும் இவன் கொண்டாடப் படவேண்டியவன் என்பதில் யாதொரு மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது.

SPAIN நாட்டைச் சேர்ந்த "லூயிஸ் ராமிரேஸ்" என்பவர் (CHESS) சதுரங்கம் எப்படி விளையாட வேண்டும் என்று "Repetition of Love and the Art of Playing Chess" என்ற நூலை எழுதியபோது இந்த விளையாட்டு ஆரம்பித்த இடம் பாரததேசம் என்பதை அறிந்திருக்க வாய்ப்பில்லை 2019 ஆம் ஆண்டு "குஜராத்தின் லோதல்" பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சதுரங்கப்பலகை சிந்துசமவெளி நாகரிக காலத்தை சேர்ந்து என்று அறிஞர்கள் குறிப்பிடுவதையும், கீழடியில் கிடைத்த சதுரங்க காய்களைக் கொண்டும் இந்த விளையாட்டு குறைந்தபட்சம் இன்றிலிருந்து 4500 ஆண்டுகளுக்கு முன்பே முக்கியமாக நம் தமிழ் மண்ணில் விளையாடப்பட்டது என்பதை உறுதி செய்யலாம்.!

சங்கப்புலவன் குன்றம்பூதனார் எழுதிய "வல்லுப்போர் வல்லாய்" என்ற பரிபாடல் வரிகள் முருகனை வல்லாட்டத்தில் சிறந்தவனே என்று புகழ்கிறது. "வல்லு" என்பது போரை மையமாகக்கொண்டு சங்ககாலத்தில் விளையாடப்பட்ட ஒரு விளையாட்டு என்பது இதன்மூலம் உறுதியாகிறது. இந்த வல்லு விளையாட்டுதான் இன்று சதுரங்கம் என்ற பெயரில் உலகம் முழுவதும் விளையாடப்படுகிறது. இதுவே கீழடியிலும், சிந்துசமவெளி நாகரிக காலங்களிலும் விளையாடப்பட்டு இவ்விளையாட்டின் பிறப்பிடமாக "பாரதமே" முன் நிற்கிறது.

உலகமே உற்றுநோக்கும் விதமாக 44 ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியின் தொடக்க விழா நேற்று நேரு மைதானத்தில் பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கப்பட்டது. இந்நன்னாளில் உலகம் போற்றும் இவ்விளையாட்டை உலகிற்கு அறிமுகம் செய்தது "பாரதவாசிகளாகிய" நாம்தான் என்பதில் பெருமைகொள்வோம்.!

-முனைவர் த.சத்தியசீலன்

# Student Zone





## "I do"... Photography



**Swetha.D**

(21107060) - II B.Sc IT



**Rahul.R**

(21123044) - II B.Com CS





# B.Sc CS-CS - Fostering Unconference

## 2nd August 2022

**"Fostering Unconference" an event organized by the Dept. Of Computer Science with Cognitive Systems as a Student participatory Learning Activity on 02nd August 2022. Students have presented and discussed two different technologies viz. Metaverse and Data Analysis.**




















THE TIMES OF INDIA

## Faculty development programme conducted

A week-long faculty development programme was conducted at Sri Ramakrishna College of Arts and Science from July 25. The programme was organised by the Internal Quality Assurance Cell of the institute on the topic "strategical approaches towards enriching the quality in HEI's in the college". Principal and secretary B L Shivakumar presided over the inaugural function. Chief guest Arockiasamy Soosaimanickam, dean of the University of Nizwa in Oman, emphasized the need for teachers to implement the techniques they learn in the programme.



தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வாரஇதழ்

Date: 02 AUG 2022

ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில்

### என்.சி.சி. மாணவர்களுக்கு கலந்துரையாடல் நிகழ்ச்சி



தி கோவை ஹெரால்டு

தமிழ் & ஆங்கிலம் வார இதழ் 02.08.2022

ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில்

### தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி

தி கோவை ஹெரால்டு

கோவை நவ இந்தியா-ஆவாரம்பாளையம் சாலையில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணாகலைமற்றும் அறிவியல் கல்லூரியில், கோயம்புத்தூர் குரூப் தேசியமாணவர்படை (என்.சி.சி.)மாணவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் ஆர். சுந்தர் தலைமை வகித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான், நிக்கோபார் தீவுகளின் தேசியமாணவர் படை இயக்குநரக துணை இயக்குநர் ஜெனரல் கமாண்டர் அதுல்குமார் ரஸ்டோகிசிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

தேசிய மாணவர் படை மாணவர்கள் திரளாகப் பங்கேற்றுள்ள இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மிகுந்தமகிழ்ச்சியளிக்கிறது. கோவையில் சிறிது காலம் பணியாற்றிய பசுமையான நாட்கள் இப்போது நினைவில் வந்து செல்கிறது.

புத்தகங்கள் வாசிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். நல்லபுத்தகங்கள்வாசிப்பது நல்ல அனுபவங்களைப் பெற்றுத்தரும். வாசிப்பை நீங்கள் நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். சமீபத்தில் நான் வாசித்த சாலையில்லா பயணம் என்ற ஆங்கில நூலின், முதல்வரி வாழ்க்கை மிகவும் கடினமானது என தொடங்கியது. ஆம். உண்மைதான். வாழ்வில் அனைத்தும் கடினம் தான். அதை எளிமையாக அமைத்துக்கொள்வதுநம் கையில் தான் உள்ளது. தடைகளைத் தாண்டிதான் வெல்ல வேண்டியுள்ளது. இதற்கு போது ஆங்கில ஃபார்முலா ஒன்று நினைவுக்கு வருகிறது. அது விழிப்புணர்வுடன் செயல்படுதல், சமநிலையைக் கையாளுதல், எதையும் தைரியமாக எதிர்கொள்ளுதல், ஒழுக்கத்தைக் கடைபிடித்தல் மிகவும் அவசியம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிந்திப்பது அவசியம். எதையும் சிந்தித்து செயல்படுத்தினால், கடினமான வாழ்க்கையை எளிமையானதாக மாற்ற முடியும்.

இவ்வாறு அவர் கூறினார். அதைத்தொடர்ந்து கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாணவர்களின்கேள்விகளுக்குகமாண்டர் அதுல்குமார் ரஸ்டோகி பதிலளித்தார். அகில இந்திய துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம்வென்ற, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின்6தமிழ்நாடுபெடிக்கல் கம்பெனி தேசிய மாணவர் படை மாணவர் டி.நந்ீஷ் அவர்கள் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பின்னர் தேசிய மாணவர் படை அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கோவை குரூப் கமாண்டர் கர்னல் எல்.சி.எஸ். நாயுடு, கோயம்புத்தூர்குரூப்தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். முடிவில் தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் ச.விவேக் நன்றி கூறினார்.

www.thekovaiherald.com | www.facebook.com/Thekovaiherald | thekovaiherald



தினமலர்

இன்றைய நிகழ்ச்சி

**என்.சி.சி., மாணவர் கலந்துரையாடல்**

ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவ இந்தியா • காலை, 10:00 மணி.



தினமணி

இன்றைய நிகழ்ச்சிகள்

**நேருக்கு நேர் நிகழ்ச்சி:** தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான நிகழ்ச்சி, சிறப்புரை– தேசிய மாணவர் படை இயக்குநரக துணை இயக்குநர் கமாண்டர் அதுல்குமார் ரஸ்டோகி, கலையரங்கம், ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவ இந்தியா, காலை 10.



இந்து தமிழ் திசை

நகரில் நடப்பவை

கோவை

தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான நேருக்கு நேர் நிகழ்ச்சி, கல்லூரி கலையரங்கம், ஸ்ரீராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவஇந்தியா, காலை 10 மணி.



THE HINDU COIMBATORE

TUESDAY, AUGUST 2, 2022

COIMBATORE TODAY

**Sri Ramakrishna College of Arts and Science:** Interaction session for NCC cadets, Commodore Atul Kumar Rastogi, Deputy Director General, take part, 10 a.m.

## The Firefox logo isn't a fox

- **It's actually a red panda.**
- **It's a common misbelief that the Firefox logo is a fox (I mean… it is in the name), but it is actually a red panda!**



## Boosting connectivity

Coimbatore may become the first city in Tamil Nadu with a metrolite system. Here is a look at some of its attributes

**COIMBATORE AREA: 4,722 SQ. KM.**

**COIMBATORE MUNICIPAL CORPORATION AREA: 257 SQ. KM**

**PHASE I**

This phase will cover 45.87 km in two corridors

**Corridor I**
31.7 km
Vellalore bus depot to PSG Foundry and Airport connectivity

**Corridor II**
14.1 km
Collectorate Metro to Valliyampalayam Pirivu

**CONNECTIVITY WITH OTHER MODES OF TRANSPORT:**

**COIMBATORE JUNCTION STATION:** It will be built at the western end of the Coimbatore Railway Junction

**UKKADAM BUS STAND STATION:** It will be located near the western end of Ukkadam Bus Stand

**PODANUR JUNCTION STATION:** It will be constructed at the western end of Podanur Railway Junction

**VELLALORE BUS TERMINAL STATION:** It will be integrated with the bus depot

**GANDHIPURAM BUS STAND STATION:** It will be linked with Gandhipuram bus stand

**AIRPORT STATION:** It will be built in close proximity to the Coimbatore Airport

### COIMBATORE METROLITE PHASE-1 CORRIDORS




**TRAFFIC DEMAND FORECAST:**

| Corridor | 2030 | 2035 | 2045 | 2055 |
|---|---|---|---|---|
| Vellalore bus depot to PSG Foundry with Airport link | 8,513 | 9,535 | 10,994 | 11,812 |
| Collectorate to Valiyampalayam Pirivu | 6,613 | 7,766 | 9,108 | 10,968 |

**Trains:**

Three-coach trains
Train length: **35 metres**

Capacity: **300 passengers**

Maximum operation speed: **60 kmph**

**Gauge:** Standard gauge

**Signalling system:** A Communication-based Train Control (CBTC) System

**Fare collection:** An automatic fare collection system with smartcards and tokens

SOURCE: CHENNAI METRO RAIL LTD

# SRI RAMAKRISHNA

## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

A Unit of M/s SNR Sons Charitable Trust

SNR SONS TRUST

Co-Ed, Accredited by NAAC with A+ Grade, Ranked 84th in NIRF 2021 | An ISO 9001:2015 Certified Institution

## PROGRAMMES OFFERED

### COMMERCE - UG

B.Com, B.Com (CA), B.Com (PA), B.Com (BPS), B.Com (IB), B.Com (IT), B.Com (CS), B.Com (B&I), B.Com (RM), B.Com (CMA), B.Com (A&F)

### MANAGEMENT SCIENCE - UG

BBA, BBA (CA)

### COMPUTING - UG

BCA, B.Sc (CS), B.Sc (IT), B.Sc (CS&CS),
B.Sc Computer Science and Data Analytics
B.Sc Computer Science
(Artificial intelligence and Data Science)

### SCIENCE AND HUMANITIES - UG

B.Sc (Electronics and Communication Systems), B.Sc (Maths), B.Sc (Physics), B.Sc (Chemistry), B.Sc (Biotechnology), B.Sc (CS & HM), B.A (Eng. Lit.),

### POST GRADUATE PROGRAMMES

MBA (AICTE Approved), MSW, M.Com, M.Com (IB), M.Sc (CS), M.Sc (IT), M.Sc (Maths), M.Sc (Electronics and Communication Systems), M.Sc (Biotechnology), M.A (Eng.Lit.)

### INTERNATIONAL EXPOSURE

Do your Course/Semester abroad at
- Asia Pacific University, Malaysia
- Sunway University, Malaysia

### STATE-OF-THE-ART INFRASTRUCTURE

- Flood Lit - Cricket
- Flood Lit - Fives Football
- Badminton, Basketball

### INDUSTRY INTEGRATION

- Tata Consultancy Services
- IBM
- Google Certification
- TCS ION
- MAAC

### RANKED IN TOP 50 COLLEGES (ALL INDIA) BY LEADING MAGAZINES

### SPECIAL FEATURES

★ 27 Clubs for societies
★ 89 Job/Skill oriented courses
★ MOE's Innovation Centre for Idea to Innovation
★ DBT Star College
★ Sports scholarship for National and State Level Players

Medical concession to students, staff, parents and alumni at Sri Ramakrishna Hospital

www.srcas.ac.in




7373085666 | 9942320001

# ADMISSIONS OPEN

## FOR THE YEAR 2022 - 2023

# SRI RAMAKRISHNA
COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)
(FORMERLY SNR SONS COLLEGE)
Avinashi Road, Nava India, Coimbatore - 641 006.

Ranked 90th by NIRF 2022 | Accredited with 'A+' Grade by NAAC
AICTE & UGC Approved, ISO 9001:2015 Certified, Affiliated to Bharathiar University




## CONVENOR

**Dr.D.Sampath Kumar**
Associate Professor - Information Technology

## COORDINATORS

**Media**
**Dr.T.Sathiyaseelan**
Assistant Professor - Tamil

**Technical**
**Dr.P.Manikandaprabhu**
Assistant Professor - Computer Science